# தமிழ் அறிவுப் போட்டி 2023

# ஆண்டு 11 (உயர் தரம்)

# மாதிரி வினாக்கள்

1. நாலா பக்கமும் கடலால் சூழப்பட்ட சிறிய நிலப்பரப்பு எப்படிக் கூறப்படுகின்றது?

**விடை:**

தீவு

2. யாருடைய நினைவாக நீயூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு புலமைச் சான்றிதல்ப் பரீட்சையை நடாத்துகின்றது?

**விடை:**

# கலாநிதி வேந்தனார் இளங்கோ

3. நீயூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு செய்யும் பணிகள் மூன்று கூறுக.

<u>விடை:</u>

1. அமரர் கலாநிதி வேந்தனார் ஞாபகார்த்தத் தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை
2. பாடநூல் வெளியீடு
3. ஆசிரியர் பயிற்சி

4. ஒழுக்கத்தை உயிரினும் மேலாகக் குறிக்கும் குறள் ஒன்றைத் தருக.

விடை:

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப் படும்.

5. இலங்கையில் தமிழரின் பாரம்பரிய பிரதேசம் என தமிழர்களால் உரிமை கோரப்படும் பிரதேசங்கள் எவை?

**விடை:**

## வடக்கு கிழக்கு (மாகாணங்கள்)

6. முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு எந்த நாட்டில் இடம்பெற்றது?

**விடை:**

மலேசியா

7. வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையத்தின் இவ்வாண்டுக்கான கருப்பொருள் என்ன?

விடை:

தமிழ்க் கலைகள் பயில்வோம்.

8. எமது கல்வி நிலையத்தின் சின்னத்தில் உள்ள வாசகம் ஒன்றைக் கூறுக?

விடை:

ஓதுவதொழியேல் /

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு.

9. இந்த இசைக் கருவியின் பெயர் என்ன?



<u>விடை:</u>

**பறை**

10. ஈழத்திலே தமிழர்களின் உரிமைக்காக உண்ணா விரதம் (நோன்பு) இருந்து இருவர் உயிர்த்தியாகம் செய்தனர். அவர்களில் ஒருவரின் பெயரைக் கூறுக?

**விடை:**

## திலீபன் / பார்த்தீபன்

## (அன்னை பூபதி / பூபதி )

11. இயற் பெயருக்குப் பதிலாக எழுத்தாளர்கள் அல்லது கவிஞர்கள் தாமாகச் சூட்டிக்கொள்ளும் பெயர் அல்லது கற்பனைப் பெயர் எவ்வாறு அழைக்கப்படும்?

விடை:

புனை பெயர்

22. அவர்கள் என்ற பன்மைச் சொல்லின் ஒருமை வடிவம் எது?

**விடை:**

**அவன் / அவள்**

13. பொருத்தமான அடுக்கு மொழியைத் தெரிவு செய்து இடைவெளிகளை நிரப்புக

அவள் புள்ளிமானைப் போலத்

................. .................. ஓடிவந்தாள்.

1. விழுந்து விழுந்து

2. பக்கம் பக்கமாக

3. துள்ளித் துள்ளி

<u>விடை:</u>

3. துள்ளித் துள்ளி

14. பின்வரும் சொற்களில் ஒன்று மட்டும் பெயராகவும் வினையாகவும் வரும். அது எது?

1. பாடு
2. அடி
3. காடு

**விடை:**

2. அடி

## 15.

“உளி தாங்கும் கற்கள் தானே சிலையாக உருமாறும்

வலி தாங்கும் உள்ளம் தானே நிலையான சுகம்காணும்”

முதலாவது வரியில் ஒரு தொழில் நடைபெறுகிறது.

இத்தொழிலைச் செய்பவரை எவ்வாறு அழைப்பர்?

**விடை:**

சிற்பி

16. தமிழ் குழந்தைக் கவிஞர்கள் இருவரின் பெயர்களைத் தருக.

**விடை:**

பாரதியார்

அழ. வள்ளியப்பா

(நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை,

கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை,

சோமசுந்தரப் புலவர்)

17. “உச்சி குளிருதல்” என்ற மரபுத்தொடரின் கருத்து என்ன?

<u>விடை:</u>

மிகவும் மகிழ்ச்சியடைதல்

18. நோபல் பரிசு பெற்ற தமிழர் ஒருவரின் பெயரைக் கூறுக?

<u>விடை:</u>

சி.வி. இராமன் - இயற்பியல் 1930

(சுப்பிரமணியன் சந்திரசேகர் - இயற்பியல் 1983,

வெங்கட்ராமன் இராமகிருஸ்ணன் - வேதியல் 2009)

19. கமலா நாளை கோவிலுக்குப் போவாள் என மாலா கூறினாள்.

இவ்வாக்கியம் எந்தக் காலத்தில் உள்ளது?

விடை :

இறந்த காலம்

20. சேர நாட்டவரான இளங்கோ அடிகளால், கி.பி. இரண்டாம் நூற்றாண்டளவில் எழுதப்பட்ட காப்பியம் எது?

<u>விடை:</u>

சிலப்பதிகாரம்

21. வானவில்லில் உள்ள ஏழு நிறங்களும் எவை?

விடை:

ஊதா, கருநீலம், நீலம், பச்சை,

மஞ்சள், செம்மஞ்சள், சிவப்பு.

22. சுட்டெழுத்துக்கள் மூன்றும் எவை?

**விடை:**

அ - இ - உ

(அவன் - இவன் - உவன்)

23. திருக்குறளின் மூன்று பாகங்கள் (மூன்று பால்கள்) எவை?

**விடை:**

அறம்

பொருள்

இன்பம் (காமத்துப் பால்)

24. சிலப்பதிகாரத்தில் உள்ள மூன்று காண்டங்களும் எவை?

விடை:

புகார் காண்டம்

மதுரைக் காண்டம்

வஞ்சிக் காண்டம்

25. தமிழிசைக் கருவிகளை மூன்று வகையாகப் பிரிப்பர். அவை எவை?

<u>விடை:</u>

துளைக் கருவி

தோற் கருவி

நரம்புக் கருவி